

ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி 16–வது பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ரோசைய்யா மாணவ–மாணவிகளுக்கு பட்டங்கள் மற்றும் தங்க பதக்கங்கள் வழங்கினார். சாய்ராம் கல்வி குழும முதன்மை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து, டிரஸ்டி சர்மிளா ராஜா, செயல் இயக்குனர் சத்தியமூர்த்தி, மேலாண்மைத்துறை தலைவர் மாறன், கல்லூரி முதல்வர் ஜெயக்குமார் ஆராய்ச்சி துறை டீன் ராஜேந்திர பிரசாத் உடன் உள்ளனர்.

### ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில்

# 1202 மாணவர்களுக்கு பட்டம்

## கவர்னர் ரோசைய்யா வழங்கினார்

சென்னை, ஜூலை.6–

மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 16–வது பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ரோசைய்யா பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார்.

4 தங்க மெடல்கள் முதல் ரேங்க் பெற்ற மாணவர்களுக்கும் 150 அண்ணா பல்கலைக்கழக ரேங்க் பெற்ற மாணவர்களுக்கும் பட்டம் வழங்கி பரிசு வழங்கினார்.

விழாவில் கவர்னர் ரோசைய்யா பேசிய தாவது:–

**வளர்ச்சி**

நான் உங்களை 'எதிர் கால உலகத்தை உருவாக்கு பவர்கள்' என்றே அழைக் கிறேன். நம்மை சுற்றி உள்ள உலகம் மாறிக் கொண்டே இருக்கிறது. உங்கள் கல்வி மற்றும் முயற்சி இவ்வு லகத்தின் வேலை இல்லா திண்டாட்டத்தை அறவே குறைத்து விடும் என்று நம்புகிறேன். உங்கள் கல்வியானது நம் நாட்டை தலைமைப் பண்புமிக்க, சிறந்த பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

விழாவில் இளங்கலை பட்டம் பெறுவோர் 928 மாணவர்கள், முதுகலை பட்டம் பெறுவோர் 274 மாணவர்கள் மொத்தமாக 1202 மாணவர்கள் பட்டம் பெற்றனர். அண்ணா பல் கலைக்கழக தேர்வுகளில் பல்கலைக்கழக தேர்வில் ரேங்க பெற்ற 154 மாணவர் களுக்கு, கல்லூரி நிர்வாகத் தின் சார்பில் 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயங்கள் பரிசாக வழங் கப்பட்டது.

சாய்ராம் கல்வி குழுமத்தின் நிறுவனம் மற்றும் தலைவர் லயன் லியோமுத்து தலைமை ஏற்று நடத்தி வைத்தார்.

முதன்மை நிர்வாக அலுவ லர் சாய்பிரகாஷ் லியோ முத்து வாழ்த்துரை வழங்கி னார். 'டிரஸ்டி' சர்மிளா ராஜா மற்றும் மேலாண்மைத்துறை தலைவர் மாறன் ஆகியோரும் பங்கேற்றனர்.

கல்லூரி முதல்வர் ஜெயக் குமார் வரவேற்று பேசி கல்லூரி கல்வி அறிக்கையை வாசித்தார்.

முடிவில் டீன் ராஜேந்திர பிரசாத் நன்றி கூறினார்.


**நாட்பட்ட தீராத நோய்களா?**

**ஆஸ்துமா சைனஸ் நோயா?** நீண்ட நாட்களாக இருக்கும் ஆஸ்துமா, நுரையீரல் பலகீனம், ரத்தச் சிவப்பணுக்கள் குறைவு போன்றவற்றால் ஏற்படுகிறது. சைனஸ் நோய் உஷ்ந்த சளி, மூக்கு மற்றும் முன்னந்தலையில் சேர்ந்து விடுவதால் ஏற்படுகிறது. ஒற்றைத்தலைவலி (Migrane) மண்டையில் சளி உறைவதாலும், நரம்புத் தளர்ச்சியாலும் உண்டாகிறது. எத்தனை வருட ஆஸ்துமா, சைனஸ், ஒற்றைத் தலைவலியும் நிரந்தமாக தீர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**மலட்டுத்தன்மையா?** ஆண்களுக்கு... அம்மை, புட்டாளம்மை போன்ற கொடிய நோய்களாலும், வாலிப வயதில் அறியாமல் கை பிரயோகத்தால் சக்திஇழுத்தல், தகாத உறவினால் வீடி. ஏற்பட்டு உயிரணுக்கள் உற்பத்தி பாதிப்பு, மது, பான்பராக் பழக்கம் போன்றவற்றினால் உயிரணுக்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டு மலட்டுத்தன்மை ஏற்படுகிறது. பெண்களுக்கு கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, பெலோபியன் டியூப் அடைப்பு, சினை முட்டைகள் ஓவரியில் (Ovary) வளர்ச்சியடையாமை, ரத்தக்குறைவு ஆகியவற்றால் ஏற்படுகிறது. அரேபிய யுனானி மூலிகைகளால் மலட்டுத்தன்மை நீங்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.